[2009 ஜூலை 1

**68—**

**பாலம்**

***33319—திரு. மு. ஜெகன்மூர்த்தி:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பொய்கைநல்லூருக்கும் பெருங்குழிப்பாக்கத்திற்கும் இடையே மக்லின் கால்வாய் மீது பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அவைக்கு அளிக்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள பாலம், அரக்கோணத்திலிருந்து ஓச்சேரி வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை எண் 126-ஐயும், சென்னையிலிருந்து சித்தூர் வழியாக பெங்களூரு செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கக்கூடிய மாவட்ட இதர சாலையில் கிலோ மீட்டர் 3/2-ல் பொய்கைநல்லூர் கிராமம் அருகில் கோவிந்தவாடி ஏரிக்குச் செல்லும் மக்லின் கால்வாய் என்று அழைக்கப்படும் கால்வாயின் குறுக்கே ஒரு பாலம் கட்டுவதற்கான பணி சமீபத்திலே தொடங்கியிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.*

**திரு. வே. மாரிமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட, வேளாங்கண்ணி-செருதூர் இணைப்புப் பாலம் கட்டுவது சம்பந்தமாக ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்டு, சுமார் 5 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பாலம் கட்டுகின்ற பணி எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

2009 ஜூலை 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தில் பாலம் கட்டுவதற்குரிய பணிக்காக, அதற்குரிய நிதியும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே ஏற்பட்ட ஒரு பிரச்சினையில் அங்கே பாலம் கட்டக்கூடாது என்று சொல்லி நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தால், அதில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கவனம் செலுத்தி, நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். அது குறித்து விரைவில் சுமுகமான முடிவு ஏற்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் கட்டுகின்ற பணி தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட படப்பை யூனியனில் இருக்கின்ற, ஆதனூர் கால்வாய்க்கு தரைப் பாலம் அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடம் தனிப்பட்ட முறையிலே பல கடிதங்கள் கொடுத்தும், சட்டமன்றத்திலே பேசியும்கூட இதுவரையிலே அதற்கு ஒரு விடிவு காலம் பிறக்கவில்லை. காரணம், அந்தப் படப்பை யூனியனுக்கு உட்பட்டிருக்கின்ற வரதராஜபுரம் என்கின்ற அந்தப் பஞ்சாயத்து இரண்டாகப் பிரிக்கப்பட்டு, வார்டு 1, வார்டு 2 என்றிருக்கிறது. வார்டு 1-லே பஞ்சாயத்து அலுவலகமும், வார்டு 2-லே ரேஷன் கடையும் இருக்கின்ற காரணத்தால், கிட்டத்தட்ட அவர்கள் தாம்பரத்தைச் சுற்றிச் செல்லக்கூடியவகையில் 12 கிலோ மீட்டர் தூரம் சென்றால்தான் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வரமுடியும். அதேபோல, ரேஷன் கடைக்கும் செல்லமுடியும். ஆகவே, இந்த நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிலேகொண்டு, அங்கே உடனடியாகத் தரைப் பாலம் அமைக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பாலத்தினுடைய விவரம் என்னிடத்திலே கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் பார்த்தால், அது அநேகமாக ஊராட்சி ஒன்றியச் சாலையாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகப் பராமரிக்கப்படுகிற சாலையாக இருந்தால், நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து நேரடியாக இதைச் செய்து விடலாம். ஊராட்சி ஒன்றியச் சாலையிலே பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், நபார்டு வங்கி போன்ற வங்கியினுடைய உதவியோடுதான் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, இப்போது உள்ளாட்சித் துறைமூலமாகவும் சாலைகள் அமைப்பதற்கும், பாலங்கள் அமைப்பதற்கும் அவற்றின் உதவியைக் கோரியிருக்கிறார்கள். அதன்மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகவோ அந்தப் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**69—**

**பாதுகாப்பு இல்லங்கள்**

***79656—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மன வளர்ச்சி குன்றியோருக்கான பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS